செ.வெ.எண்:34 நாள்: 15.07.2017

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், கரூர் மாவட்டம்**
**2016- 2017 ம் ஆண்டிற்கான தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விளையாட்டு சீருடை வழங்கும் திட்டம்**

தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களில் தங்கப்பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கு ரூ.6000/- தொகைக்கான விளையாட்டு உடைகளும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.4000/- தொகைக்கான விளையாட்டு உடைகளும், வெண்கலப்பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.2000/- தொகைக்கான விளையாட்டு உடைகளும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்த செய்தியினை திரு கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில் 2016-2017 ம் ஆண்டில் தேசிய அளவிலான போட்டிகளில் **ஏப்ரல்-2016 முதல் மார்ச்-2017** வரையுள்ள காலங்களில் கலந்து கெண்டு தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்களது பெயர், முழு முகவரி மற்றும் விளையாட்டு அசல் சான்றிதழ் மற்றும் இரண்டு நகல்களுடன் கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கம், மாலநாயக்கன்பட்டி கிராமம், நீதிமன்றம் பின்புறம், தாந்தோன்றிமலை - 639005 என்ற முகவரியில் **25.07.2017** ம் தேதிக்குள் நேரில் வந்து தங்களது பெயர்களை பதிவு செய்து கொண்டு பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்